<u>சுருக்கம்</u>

பணியமைப்பு -நெடுஞ்சாலைத்துறை-பணி நீக்க காலத்தில் இறந்த சாலைப்பணியாளர்கள் - மீண்டும் பணியமர்த்தப்பட்ட சாலைப்பணியாளர்கள் - பணி நீக்க காலம் முறைப்படுத்தி – ஆணைகள் வெளியிடப்படுகின்றன

- - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - -

நெடுஞ்சாலை (எச்எம்2) துறை

அரசாணை (நிலை)எண்.133 நாள்: 21–08–2006

<u>படிக்கவும்:</u>

(1) அரசு ஆணை (நிலை) எண். 184 நெ(எச்.எம்.2) துறை நாள் 29.5.97
(2) அரசு ஆணை (நிலை) எண்:160 நெ(எச்.எம்.2) துறை நாள் 5.9.2002
(3) அரசு ஆணை (நிலை) எண்.22 நெ(எச்.எம்.2) துறை நாள் 10.02.2006.

<u>ஆணை:</u>

நெடுஞ்சாலைத்துறையில், 9813 சாலைப் பணியாளர் பணியிடங்களை நிரப்புவதற்கு மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணை மூலம் ஆணையிடப்பட்டது. அதற்கிணங்க 9728 சாலைப் பணியாளர்கள் நியமனம் செய்யப்பட்டனர். ஓராண்டிற்கு பிறகு அவர்களின் பணி வரன் முறைப்படுத்தப்பட்டது. இதற்கிடையே 100 சாலைப் பணியாளர்கள் பல்வேறு ஒழுங்கு நடவடிக்கைகள் காரணமாக பணி நீக்கம் செய்யப்பட்டனர். எஞ்சிய 9628 சாலைப் பணியாளர்களும் நிர்வாக காரணங்களால், மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணை மூலம் 5–9–2002 முதல் பணி நீக்கம் செய்யப்பட்டார்கள். இந்த பணி நீக்கம் தொடர்பான வழக்கு உச்சநீதி மன்றத்தில் நிலுவையில் இருக்கும் பொழுதே, பணி நீக்கம் செய்யப்பட்ட 9628 சாலைப்பணியாளர்களையும் மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட அரசாணை மூலம் மீண்டும் பணியமர்த்தி ஆணையிடப்பட்டது.

2. மேற்கண்ட பணி நீக்க காலத்தில், மொத்தம் 94 சாலைப்பணியாளர்கள் இறந்து விட்டனர். அவர்கள் பணியில் இல்லாத பொழுது மரணமடைந்ததால் அவர்களின் குடும்பங்களுக்கு அரசின் சலுகைகள் வழங்க இயலாத நிலை ஏற்பட்டது. எனவே அவர்களின் நிலையினை அரசு கனிவுடன் ஆய்வு செய்து பணி நீக்க காலத்தில் இறந்த சாலைப்பணியாளர்களின் சட்டப்பூர்வ வாரிசுகள் குடும்ப ஓய்வூதியம், பணிக்கொடை,

குடும்ப நல நிதி, கருணை அடிப்படையிலான வேலை போன்ற சலுகைகளைப் பெற ஏதுவாக இறந்த சாலைப்பணியாளர்களின் பணி நீக்க காலத்தை, அதாவது, அவர்கள் பணி நீக்கம் செய்யப்பட்ட நாளான 5–9–2002 முதல் அவர்கள் மரணமடைந்த நாள் வரையிலான காலத்தை, ஊதியமில்லா அசாதாரண விடுப்பாக முறைப்படுத்த அரசு இதன் மூலம் ஆணையிடுகிறது. அதே போன்று 5–9–2002 ல் பணி நீக்கம் செய்யப்பட்டு மீண்டும் பணியமர்த்தப்பட்ட சாலைப்பணியாளர்களின் முழுப் பணி நீக்க காலத்தையும் ஊதியமில்லா, அசாதாரண விடுப்பாக முறைப்படுத்தவும் அரசு ஆணையிடுகிறது.

3. பணி நீக்க காலத்தில் இறந்த மேற்கண்ட சாலைப் பணியாளர்களின் சட்டப்பூர்வ வாரிசுகளுக்கு உரிமையுடைய குடும்ப ஓய்வூதியம் , பணிக்கொடை , குடும்ப நல நிதி போன்ற சலுகைகளை உடனே வழங்க நடவடிக்கை எடுக்குமாறும், அவர்களின் தகுதிக்கேற்ப, முன்னுரிமை அளித்து கருணை அடிப்படையிலான பணி நியமனம் வழங்குமாறும் தலைமைப் பொறியாளர் (பொது), நெடுஞ்சாலைத் துறை அறிவுறுத்தப்படுகிறார்.

3. இவ்வரசாணை பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறையின் அ.சா..எண். 43336 / அ.வி.III / 2006-1, நாள் 18-08-2006-இல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கா. அலாவுதீன்,
அரசு செயலாளர்.

பெறுநர்.

தலைமைப் பொறியாளர் (பொது) , நெடுஞ்சாலைத் துறை, சென்னை –5
அனைத்து தலைமைப் பொறியாளர்கள் (நெடுஞ்சாலைத் துறை)
மாநில கணக்காயர் , சென்னை–18.

<u>நகல்</u>
பணியாளர் மற்றும் நிர்வாக சீர்த்திருத்தத் துறை, சென்னை –9
தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, சென்னை –9
நிதித்துறை, சென்னை –9
முதலமைச்சர் அலுவலகம் சென்னை –9
சிறப்பு நேர்முக உதவியாளர் அமைச்சர் (நெடுஞ்சாலைத் துறை) அலுவலகம் சென்னை –9
செய்தி மற்றும் மக்கள் தொடர்பு துறை, சென்னை –9

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்